பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

22 06 2025 **SUNDAY** 7 15 **PM**

தலைப்புச் செய்திகள்

1. ஈரான் அதிபர் திரு. **Masoud Pezeshkian,** பிரதமர் திரு. நரேந்திர மோடியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். ****** அமைதி மற்றும் மனிதநேயத்திற்கு இந்தியா எப்போதும் துணை நிற்கும் என்று பிரதமர் கூறியுள்ளார்.

2. நாடு அனைத்து துறைகளிலும் இதுவரை இல்லாத அளவிற்கு வளர்ச்சியை கண்டு வருவதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

3. காபி ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

4. பிஜேபி உறுப்பினர்களின் எண்ணிக்கை 14 கோடியை எட்டியுள்ளதாக அக்கட்சி தெரிவித்துள்ளது.

5. நான்கு நாடுகளுக்கு இடையேயான ஜூனியர் ஹாக்கி போட்டியில் இந்தியா 3-1 என்ற கோல்கணக்கில் ஆஸ்திரேலியாவை வென்றது.

>>>>>>>><<<<<<<<

ஈரான் அதிபர் திரு. **Masoud Pezeshkian,** பிரதமர் திரு. நரேந்திர மோடியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

இந்த பேச்சுக்களின் போது, ஈரான் - இஸ்ரேல் இடையேயான மோதல் தீவிரமடைந்தது குறித்து கவலை தெரிவித்ததாக சமூகவலைதளத்தில் பிரதமர் தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் சூழல் குறித்தும் விரிவாக கேட்டறிந்ததாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

பதற்றத்தை தணிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் விரைவில் அமைதி திரும்ப பேச்சக்களை நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியாக திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்த பேச்சுக்களின்போது ஈரான் அதிபர், தற்போது அங்கு நிலவும் சூழல் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

அமைதி மற்றும் மனிதநேயத்திற்கு இந்தியா துணை நிற்கும் என்று பிரதமர் அப்போது கூறினார்.

ஈரானில் உள்ள இந்தியர்களை பாதுகாப்பாக அழைத்து வருவதற்கு உதவியதற்காக பிரதமர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இருநாடுகளுக்கு இடையேயான உறவுகளை மேலும் வலுப்படுத்துவது என இந்த பேச்சுக்களின் போது தீர்மானிக்கப்பட்டது.

இதற்கிடையே, அணு செறிவூட்டும் மையங்களை குறிவைத்து அமெரிக்கா தாக்குதல் நடத்தியதற்கு ஈரான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

சர்வதேச சட்ட நெறிமுறைகளை மீறி அமெரிக்கா இந்த தாக்குதலை நடத்தியுள்ளதாக ஈரான் தெரிவித்துள்ளது.

சர்வதேச அணுசக்தி முகமையின் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களுக்கு எதிராக அமெரிக்கா இந்த தாக்குதலை நடத்தியுள்ளதாகவும் ஈரான் குற்றம் சாட்டியுள்ளது.

இந்த தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணை தாக்குதலை நடத்தியது.

இஸ்ரேலில் உள்ள விமான நிலையங்கள், உயிரி ஆராய்ச்சி மையங்கள் மற்றும் ராணுவ நிலைகளை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈரானின் 18 ஏவுகணைகள் இஸ்ரேல் வான் பாதுகாப்பு கட்டமைப்பை மீறி அந்நாட்டிற்குள் சென்று நடத்திய தாக்குதலில் 23 பேர் உயிரிழந்தனர்.

இதற்கு பதிலடி கொடுக்கும் விதத்தில் இஸ்ரேலும் ஏவுகணை தாக்குதலை நடத்தியது.

இதன் காரணமாக இருநாடுகளுக்கு இடையே இரண்டு வாரங்களுக்கு முன் தொடங்கிய மோதல் தற்போது தீவிரமடைந்துள்ளது.

இதற்கிடையே, சர்வதேச அணுசக்தி முகமை நாளை அவசரக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது.

ஈரானின் அணுசகத்தி திட்டங்களை குறிவைத்து அமெரிக்கா நடத்திய தாக்குதலுக்குப் பின்னர் எழுந்துள்ள சூழல் குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்படவுள்ளது.

இந்நிலையில், அமெரிக்கா நடத்திய இந்த தாக்குதல் மோதலை மேலும் தீவிரப்படுத்தியுள்ளதாக ஐ.நா பொதுச்செயலாளர் திரு. அன்டோனியோ குட்டரஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

இதன் காரணமாக நிலைமை மேலும் மோசமடைய கூடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு எதிரான சூழல் வலுவடையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உறுப்பு நாடுகள், பதற்றத்தை தணிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு. அன்டோனியோ குட்டரஸ் கூறியுள்ளார்.

இஸ்ரேல் உதவியுடன் அமெரிக்கா நடத்திய இந்த தாக்குதல் கடும் கண்டனத்திற்குரியது என்று ஈரான் வெளியுறவு அமைச்சர் திரு. **Scyed Abbas Araghchi** தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், அமெரிக்கா நடத்திய தாக்குதலுக்கு பாராட்டு தெரிவித்து இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெத்தன்யாஹூ காணொலி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப்மேற்கொண்ட இந்த முடிவு வரலாற்றை மாற்றியமைக்கும் என்றும் இஸ்ரேல் பிரதமர் கூறியுள்ளார்.

ஆப்பரேஷன் ரைசிங் லைன் மூலம் இஸ்ரேல் – ஈரான் மீது நடத்தி வரும் தாக்குதல் பெரிய அளவில் வெற்றி பெற்றுள்ளதாகவும் திரு. பெஞ்சமின் நெத்தன்யாஹூ தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, ஈரானிலிருந்து 311 இந்தியர்கள் சிறப்பு விமானம் மூலம் புதுதில்லி அழைத்து வரப்பட்டனர். இதுவரை, இதற்காக 7 சிறப்பு விமானங்கள் இயக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>>>>>><<<<<<<**

நடப்பு நிதியாண்டு இறுதிக்குள் நக்ஸலைட்டுகள் முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டும் என்ற இலக்குடன் பாதுகாப்பு படையினர் செயல்பட்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

ராய்ப்பூரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நக்ஸலைட்டுகளை ஒடுக்குவதற்காக பாதுகாப்புப் படையினர் தீவிரமாக செயல்பட்டு வருவதை சுட்டிக்காட்டினார்.

சத்திஷ்கர் மாநிலம் உருவானதற்கு முன்னாள் பிரதமர் வாஜ்பேயி தான் காரணம் என்று கூறிய அவர், அம்மாநிலத்தை அழகுபடுத்திய பெருமை பிரதமர் திரு. நரேந்திர மோடியையே சாரும் என்று குறிப்பிட்டார்.

சத்திஷ்கரில் வளர்ச்சிக்காக நிறைவேற்றப்பட்ட திட்டங்களையும் அவர் பட்டியலிட்டார்.

தேசிய தடய அறிவியல் பல்கலைக் கழக வளாகம், மத்திய தடய அறிவியல் ஆய்வக வளாகம் ஆகியவற்றுக்கு இன்று தாம் அடிக்கல் நாட்டியதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

தொழில்துறையிலும் சத்திஷ்கர் வளர்ச்சி கண்டு வருவதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

**>>>>>>>><<<<<<<**

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, நாடு அனைத்து துறைகளிலும் இதுவரை இல்லாத அளவிற்கு வளர்ச்சியை கண்டு வருவதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

தூர்தர்ஷனுக்கு அவர் அளித்த சிறப்பு நேர்காணலில் இதனை தெரிவித்த அவர், கட்டமைப்பு வசதிகள் இதுவரை இல்லாத அளவிற்கு மேம்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

இளையோர் நலனுக்காக நிறைவேற்றப்பட்ட திட்டங்களையும் அமைச்சர் பட்டியலிட்டார்.

**>>>>>>>><<<<<<<**

கர்நாடகாவில் மாங்கனி விலைச்சரிவால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படும் என்று மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக கர்நாடக வேளாண் துறை அமைச்சர் திரு. **Chaluvaraya Swamy** யுடன் காணொலி வாயிலாக நடத்திய ஆலோசனையின் போது இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

விவசாயிகளுக்கு ஏற்பட்ட பாதிப்பை ஈடுசெய்வதற்கான நிவாரணத் தொகையில், 50 சதவீதத்தை மத்திய அரசு வழங்கும் என்று அமைச்சர் கூறினார்.

இரண்டரை லட்சம் மெட்ரிக் டன் மாங்கனிகளுக்கான விலை இழப்பை ஈடு செய்வதற்கு இந்த தொகை வழங்கப்படும் என்றும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>>>>>><<<<<<<**

காபி ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய அரசு கூறயுள்ளது.

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, 11 ஆண்டுகளில் காபி ஏற்றுமதி 125 சதவீதம் அதிகரித்துள்ளது என்று காபி வாரியம் தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து அதிக அளவில் இத்தாலி, ஜெர்மனி, பெல்ஜியம், கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு காபி ஏற்றுமதி செய்யப்படுவதாக அந்த வாரியம் கூறியுள்ளது.

**>>>>>>>><<<<<<<**

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பில் கடந்த ஏப்ரல் மாதம் மட்டும் 19 லட்சம் பேர் இணைந்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இது, அதற்கு முந்தைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 31 புள்ளி மூன்று ஒன்று சதவீதம் அதிகமாகும் என்று தொழிலாளர் நலத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>>>>><<<<<<<

பிஜேபி உறுப்பினர்களின் எண்ணிக்கை 14 கோடியை எட்டியுள்ளதாக அக்கட்சி கூறியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், பிஜேபி மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை அதிகரித்து வருவதை இது உணர்த்துவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<<

பீகார் சட்டப்பேரவை தேர்தலை ஒட்டி, வீடு வீடாக சென்று வாக்காளர் பட்டியலை சரிபார்க்கும் பணியினை மேற்கொள்ள தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளது.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் திருத்தங்கள் குறித்து அரசியல் கட்சிகள், சமூக அமைப்புகள் தெரிவித்த அச்சங்களின் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக தேர்தல் ஆணைய வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

>>>>>>>><<<<<<<

நான்கு நாடுகளுக்கு இடையேயான ஜூனியர் ஹாக்கி போட்டியில் இந்தியா 3-1 என்ற கோல்கணக்கில் ஆஸ்திரேலியாவை வென்றது.

பெர்லினில் நடைபெற்ற இப்போட்டியில் **Shardanand Tiwari, Sourab Anand Khushwaha, Amir Ali** தலா ஒரு கோல் போட்டனர்.

------------

துனிஷியாவில் நடைபெற்ற உலக பாரா கிராண்ட் ப்ரீ தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா 3 தங்கம், 7 வெள்ளி, 6 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

>>>>>>>><<<<<<<

வியட்நாமில் நடைபெற்ற 23 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த போட்டியின் ஆடவர் பிரிவில் ஒட்டு மொத்த சாம்பியன் பட்டத்தை இந்தியா வென்றுள்ளது.

>>>>>>>><<<<<<<

ஆசிய பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியா 4 தங்கம், 10 வெள்ளி, 13 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

தாய்லாந்தில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Nitesh Kumar**-ம், மகளிர் ஒற்றையர் பிரிவில் மனிஷா ராம்தாசும் தங்கப்பதக்கம் வென்றனர்.

இதேபோல், ஆடவர் இரட்டையர் பிரிவில் **Sukant Kadam – Nitesh Kumar** இணையும், கலப்பு இரட்டையர் பிரிவில் நிதேஷ்குமார் - துளசிமதி முருகேசன் இணையும் தங்கப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் சூர்யகாந்த்தும், மகளிர் ஒற்றையர் பிரிவுகளில் **Mandeep, Nityashree, Palak Kholi** ஆகியோர் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் இரட்டையர் பிரிவுகளில் ஜெகதீசன் - நவீன் இணையும், **Hardik - Ruthick** இணையும், மகளிர் இரட்டையர் பிரிவுகளில் மானசி – துளசிமதி இணையும், நித்யா – **Rachana** இணையும் வெள்ளிப்பதக்கம் வென்றது.

கலப்பு இரட்டையர் பிரிவுகளில் நித்யா – கிருஷ்ணா இணையும், **Ruthick - Mansi** இணையும் வெள்ளிப்பதக்கம் வென்றது.

>>>>>>>><<<<<<<

**Scychelles**-ல் நடைபெற்று வரும் சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் ஆதித்ய பிரதாப், நீரஜ், ஹிமான்சு, ஆசிஷ், அன்மோல், கார்த்திக் தலால், கவ்ரவ் ஆகியோர் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>>>><<<<<<<

லீட்ஸில் நடைபெற்று வரும் இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாவது நாளான இன்று, இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் சற்றுமுன்வரை 7 விக்கெட் இழப்புக்கு 407 ரன் எடுத்துள்ளது.

>>>>>>><<<<<<<